Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.89**/2022**

Deposition of PW4 Witness for Defence

Defence Court

Name :R.Karthick Calling :

Father's Name :Ravi Village :

Age : Taluk :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 03th day of December 2024.

(A1 to A3 are present.)

(மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 12.12.2020, இரவு 09.00 மணிக்கு மேல். சம்பவம் பற்றிய தகவலை எனக்கு அ.சா.3 அசோக்குமார் கூறினார். இவ்வழக்கில் புகார் அ.த.சா.1 ஐ நான் தான் எழுதினேன். அ.சா.1 ல் உள்ள விவரங்கள் என்னால் எழுதப்பட்டது. அதில் எனது தாயார் கையொப்பமிட்டுள்ளார். அ.த,சா.1 ல் அ.சா.3 அசோக்குமார் எங்களிடம் தகவல் சொன்னதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால்

இல்லை. அ.த.,சா.1 ல் அ,சா.3 அசோக்குமார் சம்பவத்தை பார்த்தாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அ.சா.3 அசோக்குமாரின் பெயர் அ.த,சா.1 ல் இல்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு இரவு 09.30 மணியளவில் வந்தேன். தகவல் தெரிந்து 5 நிமிடத்தில் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டோம். எனது வீட்டிலிருந்து சம்பவ இடம் 250 மீட்டர் துூரத்தில் உள்ளது. சம்பவ இடத்திற்கு என்னுடன் எனது தாயார் மற்றும் எனது தம்பி நவீன் குமார் ஆகிய மூவரும் காரில் வந்தோம். நாங்கள் சம்பவ இடத்தில் சென்று பா ர்த்த போது எனது தம்பி

அசாக்குமாருக்கு மூச்சு, பேச்சு இல்லை. மருத்துவ மனைக்கு காரில் சென்று கொண்டிருந்த போது எனது தாயாரும் நவீன் குமாரும் மடியில் வைத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது காயம் பட்ட இடத்தை கையினால், இரத்தம் வராமல், அமுக்கி பிடித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது எனது தாயார் மற்றும் நவீன் குமாரின் உடைகளில் இரத்தம் பட்டதா என்பதை நான் கவனிக்கவில்லை. மருத்துவ மனையை அடைந்தவுடன் மருத்துவர்களிடம் எனது தம்பி அசோக்குமாரை அழைத்து சென்றது நான் தான். மருத்துவ மனையில் மருத்துவர் எனது தம்பி அசோக்குமாரை பரிசோதித்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக கூறினார். ஆதலால் சிகிச்சை எதுவும் அளிக்கவில்லை. அந்த மருத்துவர் மருத்துவ மனையில் இருந்த வெளிப்புற காவல் நிலையத்திற்கு தகவல் ஏதேனும் சொன்னாரா என்றால் எனக்கு தெரியாது. நானும் சொல்லவில்லை. நான் நள்ளிரவு 12.15 மணியளவில் காவல் நிலையம் சென்றேன். காவல் நிலையத்தில் எனது தாயார் சொல்ல சொல்ல நான் தான் புகாரை எழுதினேன். புகார் எழுதப்பட்ட பேப்பரை போலீசார் கொடுத்தார்கள். எனது தம்பி இறந்துவிட்ட சம்பவம் குறித்து புகார் அளிக்கவேண்டும் என்று சொன்னதன் பேரில் நான் அவர்களிடம் பேப்பர் கேட்க அவர்கள் பேப்பர் கொடுத்தார்கள். அப்போது போலீசார் ்என்னிடம் எனது த ம்பி அசோக்குமார் எவ்வாறு, எங்கு இறந்தார் யார் அவரை தாக்ககினார்கள் என்பது குறித்து கேட்டர்களா என்றால் ஆம். அ.த,சா.1ல் அந்த புகாரை எனது தாயார் சொல்ல சொல்ல நான் எழுதியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்லியிருப்பது போல் புகாரை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எழுதவில்லை என்றும் பின்னிட்டு ஆலோசனையின் பேரில் எதிரிகளின் பெயர்களை சேர்த்து புகார் எழுதப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை 13.12.2020 அன்று காலை 10.00 மணியளவில் எனது வீட்டின் அருகே வைத்து விசாரித்தார். போலீசார் விசாரணையின் போது, 12/12/ 2020 அன்று இரவு 08.30 மணியவில் நான், எனது பெற்றோர்கள் மற்றும் எனது தம்பிகள் ஆகியோர் எனது வீட்டிலிருந்த போது ராஜாவின் மகன் சதீஷ் எனது வீட்டிற்கு வந்து அசோக்குமாரை வெளியே போய் பேசலாம் என்று சொல்லி அழைத்து சென்றார் என்றும் சதீஷ் எனது உறவினரின் பெண்ணான சுவேதாவை காதல் திருமணம் செய்து கொண்டார் என்றும் நாங்கள் ஒட்டர் சாதியை சேர்ந்தவர்கள் என்றும் சதீஷ் வன்னியர் சாதியை சேர்ந்தவர் என்றும்

திருமணத்திற்கு பின் சுவேதா தற்கொலை செய்து கொண்டார் என்றும் அதன் பேரில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு சதீஷின் பெற்றோர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள் என்றும் அப்பிரச்சனைக்கு எனது தம்பி அசோக்குமார் தான் காரணம் என்று சதீஷ் மற்றும் அவரது குடும்பத்தினர் விரோதம் கொண்டிருந்தார்கள் என்றும் சொல்லியுள்ளேனா என்றால் ஆம். போலீஸ் விசாரணையின் போது, இரவு 09.00 மணிக்கு மேல் மதகன் மகன் அசோக் குமார், அ.சா.3, எனது வீட்டிற்கு வந்து புதுசத்திரம் பேருந்து நிறுத்தம் அருகே எனது தம்பி அசோக் குமாரின் இடது விலாவில் கத்தி குத்தப்பட்டது என்று சொன்னேனா என்றால் ஆம். போலீஸ் விசாரணையின் போது உடனே, நான் எனது தம்பி நவீன் குமார் மற்றும் எனது பெற்றோர்கள் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றும் அங்கு எனது தம்பி அசோக்குமார் இடது விலாவில் கத்தி குத்தப்பட்ட காயம் ஏற்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தார் என்றும் நாங்கள் உடனே காரில் எனது தம்பி அசோக்குமாரை திருவள்ளூர் அரசு மருத்துவ மனைக்கு எடுத்து சென்றோம் என்றும் சொன்னேனா என்றால் ஆம். எனது தம்பி அசோக்குமார் குடித்துவிட்டு கட்சிகாரர்களுடன் ஏற்பட்ட தகராறில் அவருக்கு காயம் ஏற்பட்டு மரணம் ஏற்பட்டது என்றும் நான் எதிரிகளின் மீது பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.